ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | செப்டம்பர் 1998 | கானம் : 2

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 4 | செப்டம்பர் 1998 | கானம் : 2


## விஷய ஸூசிகை

பக்கம்


1. ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் 3
2. மதுரமான மஹனீயர் - 34 5
3. யுகள கீதம் 6
4. நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 15 8
5. பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் 10
6. வேத கதைகள் - 16 11
7. ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 6 13
8. எந்தரோ மஹானுபாவுலு - 4 19
9. உண்மையே பேசுதல் 23
10. பாலகர்களுக்கு ஒரு கதை - 11 27
11. ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 37 30
12. செய்திகள் 32
13. நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் 32



ஐந்தாம் ப்ரஹ்மோத்ஸவ வைபவத்தில், நந்தோத்ஸவம் அன்று,
ஸ்ரீ ஸ்வாமிகளின் திவ்யநாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கமாஸ் தாளம் : ஆதி

பல்லவி

*பக்திரஸம் பக்ஷயாமி*
*பாகவதம் வக்ஷ்யாமி (பக்தி)*

சரணங்கள்

*குருக்ருபாம் பக்ஷயாமி*
*குருமஹிமாம் வக்ஷ்யாமி (பக்தி)*

*ப்ரேமரஸம் பக்ஷயாமி*
*ப்ரேமபலம் வக்ஷ்யாமி (பக்தி)*

*ஸாத்வனுக்ரஹம் பக்ஷயாமி*
*ஸாதுகுணம் வக்ஷ்யாமி (பக்தி)*

*முரளீகானம் பக்ஷயாமி*
*முரளிஸ்வரூபம் வக்ஷ்யாமி (பக்தி)*

அறிவிப்பு: 1. 'மதுரமுரளி' இரண்டாண்டு இதழ்கள், (July '95 - July'97) இரண்டு பாகங்களில் Bind செய்யப்பட்டு வெளி வந்துள்ளன.

2. 'மதுரமுரளி' மூன்றாம் ஆண்டு இதழ்கள் "August '97 - July '98' தனி பாகமாக வெளி வந்துள்ளது.

இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.

# 34

அரிமேயவிண்ணகரம், ஸ்ரீ குடமாடும்கூத்தர் ஸம்ப்ரோக்ஷணம் முடிந்து வந்த பிறகு, நம்முடைய ஸ்வாமிகள், திருநெல்வேலி ஸமீபத்தில் உள்ள நவதிருப்பதி உள்ளிட்ட சில திவ்யதேச ஸ்தலங்களுக்குச் சென்று பெருமாளை ஸேவித்து வந்தார்.

திருக்குறுங்குடி, ஸ்ரீவைகுண்டம், இரட்டை திருப்பதி போன்ற க்ஷேத்திரங்கள் T.V.S. குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ வேணுஸ்ரீநிவாசன் அவர்களால் ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டுள்ளன. தென்திருப்பேறை, ஆழ்வார்திருநகரி, திருக்கோளூர், வர்கலை, திருவனந்தபுரம், திருப்பதிஸாரம் திவ்யதேசங்களையெல்லாம் ஸேவித்த பிறகு, நம் ஸ்வாமிகள் திருக்குறுங்குடி வந்து பெருமாளை ஸேவித்தார்கள். திருக்குறுங்குடி பெருமாள், ஸ்ரீ வைஷ்ணவநம்பியின் அழகை வர்ணித்து மாளாது. பாஷ்யகாரரால் இந்த பெருமாளுக்கு அஷ்டாக்ஷரம் உபதேசம் செய்யப்பட்டது. பெருமாளுக்கு எம்பெருமானாரால், த்வாதச புண்ட்ரமும் தரிக்கப்பட்டது. இந்த பெருமாளுடைய ரூப லாவண்யத்தில் மயங்கியே, நம்மாழ்வார், நாயகி பாவத்தில் பெருமாளிடம் ஈடுபடுகின்றார். பத்ரிகாஶ்ரமத்தில் நாராயணன் நரனுக்கு உபதேசம் செய்தார். இங்கு, நரன் நாராயணனுக்கு உபதேசம் செய்தார். திருக்குறுங்குடி மலைமேல் ஒரு கோயில் உள்ளது. அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு மலைநம்பி என்று பெயர். இதையும் T.V.S. குடும்பத்தார் புனருத்தாரணம் செய்திருக்கிறார்கள்.

நம் ஸ்வாமிகள் மலைநம்பியை ஸேவிக்கச் சென்று அங்கு, அதாவது, மலைமேலேயே நான்கு நாட்கள் தங்கிவிட்டார். ஜப த்யானங்கள் செய்வதற்கு ஏற்ற இடம். அந்த மலை வனத்துறையின் கீழ் உள்ளது. மகேந்திரமலையின் தொடர்ச்சியே அந்த மலை. மிகவும் ஸாந்நித்யம் உள்ள மலை. தபோ பூமி. பல மஹாத்மாக்கள் இந்த மலையில் தவம் செய்துள்ளனர். இங்கு அநேக ஸித்தர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். மலை மிகவும் சோலையாக உள்ளது. கரடி, குரங்கு, யானை, காட்டெருது போன்ற மிருகங்களும் உள்ளன.

இந்த மலையில் எழுந்தருளியிருக்கும் மலைநம்பியோ மிகவும் கொள்ளை அழகு. ஒவ்வொரு சனிக்கிழமையும் அநேக ஜனங்கள் வந்து பக்தி சிரத்தையுடன் ஆராதனை செய்கின்றனர். இந்த மலையில் அருவியும் உள்ளது. அதற்கு நம்பி தீர்த்தம் என்று பெயர். இன்றும் அங்கு உள்ள ஸித்த புருஷர்கள் அந்த பெருமாளை இரவில் வந்து ஆராதிப்பதாக ஒரு நம்பிக்கை.

அவசியம் நாம் அனைவரும் போய் ஒரு முறையாவது மலை நம்பியை தரிசிக்க வேண்டும். இங்கு ஸ்வாமிகளுக்கு ஏற்பட்ட அனுபவங்களையெல்லாம் நாங்கள் கேட்ட பொழுது மிகவும் ஆனந்தமாக இருந்தது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

## அறிவிப்பு

ஸ்ரீ ஹரி :

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**, சென்னை - 600 083

### மதுரமுரளி வருடசந்தா

"மதுரமுரளி" க்கான வருடசந்தா ஜூன் '98 இதழுடன் முடிவடைந்துள்ளது.

அநேக சந்தாதாரர்கள் இன்னமும் தங்கள் சந்தாவை செலுத்த முன் வரவில்லை. அவர்களுக்கு இது விஷயமாக தனியாக தொடர்பு கொள்வது என்பது சிரமமான ஒன்றாகும். ஆகவே, சந்தா செலுத்த வேண்டியவர்கள் ***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDயாக ரூ. 60/-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

மதுரமுரளி,
திரு. V. சங்கரன்,
5 / 3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே. நகர், சென்னை - 600 078.
Phone No : 471 3927

# யுகள கீதம்

ஸ்ரீமத் பாகவதம், பத்தாவது ஸ்கந்தம், 35-வது அத்யாயம்

வாமபாஹுக்ருதவாமகபோலோ
வல்கித ப்ருரதரார்பிதவேணும் ।
கோமளாங்குளிபிராஶ்ரிதமார்கம்
கோப்ய ஈரயதி யத்ர முகுந்த: ॥ 1

வ்யோமயான வனிதா: ஸஹ ஸித்தை:
விஸ்மிதாஸ்ததுபதார்ய ஸலஜ்ஜா: ।
காமமார்கண ஸமர்பிதசித்தா:
கஶ்மலம் யயுரபஸ்ம்ருதநீவ்ய: ॥ 2

ஹந்த சித்ரமபலா: ஶ்ருணுதேதம்
ஹாரஹாஸ உரஸி ஸ்திரவித்யுத் ।
நந்தஸூனுரயமார்த ஜனானாம்
நர்மதோ யர்ஹி கூஜிதவேணு: ॥ 3

வ்ருந்தஶோ வ்ரஜவ்ருஷா ம்ருககாவோ
வேணுவாத்ய ஹ்ருதசேதஸ ஆராத் ।
தந்ததஷ்டகபலா த்ருதகர்ணா
நித்ரிதா லிகிதசித்ரமிவாஸன் ॥ 4

பர்ஹிணஸ்தபகதாதுபலாஶை:
பத்த மல்லபரிபர்ஹ விடம்ப: ।
கர்ஹிசித்ஸபல ஆலிஸகோபை:
கா: ஸமாஹ்வயதி யத்ர முகுந்த: ॥ 5

தர்ஹிபக்னகதய: ஸரிதோவை
தத்பதாம்புஜரஜோஷ்நிலநீதம் ।
ஸ்ப்ருஹ யதீர்வய மிவாபஹுபுண்யா:
ப்ரேமவேபித புஜா: ஸ்திமிதாப: ॥ 6

(1 & 2) ஹே! கோபிகைகளே! முகுந்தன் எப்பொழுது இடது தோளில் வைக்கப்பட்ட கன்னத்தை உடையவராக, நர்தனஞ் செய்கின்ற புருவங்களையுடையவராகவும், கோமளமான விரல்களினால் ஆய்ரயிக்கப்பட்ட ஸப்தஸ்வர துளைகளை உடையதும், கீழுதட்டில் வைக்கப்பட்டதுமான வேணுவை வாசிக்கின்றாரோ அப்பொழுது ஆகாய விமானத்தில் ஸஞ்சாரம் செய்யும் ஸித்தர்களின் ஸ்த்ரீகள், ஸித்தர்களுடன் கூடினவர்களாக இருந்தபோதிலும், வேணுகீதத்தைக்கேட்டு முதலில் ஆய்சர்யமடைந்து பிறகு மன்மதபாணங்களினால் அர்ப்பணஞ் செய்யப்பட்ட (க்ருஷ்ணனுக்கு) சித்தத்தையுடையவர்களாய், வெட்கத்துடன் கூடினவர்களாய் அவிழ்ந்த ஆடையையும் மறந்தவர்களாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் மோஹமடைந்தனர்.

(3 & 4) அபலைகளே! இந்த ஆய்சர்யத்தைக் கேளுங்கள். முத்துஹாரம் மார்பில் ப்ரகாசிப்பதுபோல் தெளிவான மந்தஹாஸத்தையுடையவனும், மின்னல் போன்ற மார்பையுடையவனும், (லக்ஷ்மீ தேவீவாஸம் செய்வதால்) துக்கமடைந்த ஜனங்களுக்கு சந்தோஷத்தைத் தருகின்றவனுமான நந்தகோபபுத்ரன் எப்பொழுது வேணுவை வாசிக்கின்றானோ அப்பொழுது ப்ருந்தாவனத்தில் உள்ள ரிஷபங்களும், மான்களும், பசுக்களும் கூட்டம் கூட்டமாக வேணுகானத்தினால் அபஹரிக்கப்பட்ட சித்தத்தை உடையவர்களாய், பற்களினால் கடிக்கப்பட்ட ஆஹாரத்தையுடையனவாயும், தூக்கப்பட்ட காதுகளை உடையனவாயும் மாறி நித்ரையடைந்தனபோலும், எழுதப்பட்ட சித்ரம் போலும் இருந்தன.

(5 & 6) ஸகி! ஒரு சமயம், மயில் பீலியினாலும் பொடியினாலும், தளிர்களிலும் செய்துகொள்ளப்பட்ட மல்லனுடைய வேஷத்தை அனுசரிக்கின்றவனான முகுந்தன், பலராமனுடனும் கோபர்களுடனும் எப்பொழுது பசுக்களை கூப்பிடுகின்றானோ, அப்பொழுது காற்றினால் கொண்டுவரப்பட்ட செல்லுதலை இழந்த, நம்மைப்போன்று அதிக புண்யஞ்செய்யாதவைகளான நதிகள் அவரது பாததூளியை விரும்புகின்றவைகளாய் அசைகின்ற அலைகளையுடையவனாகவும் அசைவில்லாத ஜலத்தையுடையவைகளாகவும் இருக்கின்றன.

(தொடரும்)

– பாலாஜி

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 15

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி

## அனுஷம்

மஹா நக்ஷத்ரங்களில் ஒன்று அனுஷம். மிகவும் உயர்ந்த நக்ஷத்ரம் இது. இந்த நக்ஷத்ரத்திற்கு பல பெருமைகள் இருப்பினும் மிக ஶ்ரேஷ்டமானதாக கூற, ஸ்ரீ மஹா பெரியவாள் அவதரித்த நக்ஷத்ரம் என்ற ஒன்றே போதும்.

அத்வைதத்தை ஸ்தாபிக்க ஸ்ரீ ஶங்கர பகவத்பாதாள் அவதரித்தார்கள். ஸ்வதர்மத்தை உபதேசிப்பதற்கு, நம் மஹாபெரியவாள் அவதரித்தார்கள். எவ்வளவோ ஞானிகளைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். நம் மஹா பெரியவாள் வர்ணாஶ்ரமங்களுக்கு கட்டுப்பட்டுக் கொண்டு அத்தனை பேரையும் அவரவர் தர்மத்தின்படி வாழ்க்கை மற்றும் நடைமுறைகளை மேற்கொள்ள வைத்தவர். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தில் நமது ஜீவதசை அமைந்தது என்பது, நாம் பல ஜன்மாக்களில் செய்த புண்யபலனே ஆகும். இப்பேர்ப்பட்ட ஸ்ரீ மஹா பெரியவாள் தான் அவதரிக்க தேர்ந்தெடுத்த நக்ஷத்ரம் அனுஷம் என்பது அதன் பெருமையாகும்.

ஒன்பது நக்ஷத்ரங்களால் தாமரை புஷ்பம் போன்ற ரூபத்தில் தெற்கு வடக்காக அடையாளம் கூறுகின்றார்கள். ஆவணி 1-ந் தேதி முதல் 13-ந் தேதி வரை நக்ஷத்ரோதய காலத்தில், ஆகாயத்தில் இந்த நக்ஷத்ரத்தை காண்பதாக வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். அனுஷ நக்ஷத்ரத்திற்கு தேவதை மித்ரன், பத்மத்தில் அமர்ந்து சூலம், அங்குஶம் தரித்து சிவந்த நிறத்துடன் ப்ரகாசிக்கிறார். அனுஷம், வ்ருச்சிக ராசியைக் கொண்டது.

அனுஷ நக்ஷத்ரத்தில் ஜனித்தவர்கள் எல்லாரிடமும் ப்ரியத்தை ஸம்பாதிப்பவர்களாக இருப்பார்கள். சுறுசுறுப்பிற்கு உதாரணமாக இருப்பார்கள். செல்வந்தர்களாக இருப்பார்கள். தன் இடத்தை விட்டு வேறு இடத்தில் வஸிப்பதில் மிகவும் விருப்பம் கொண்டிருப்பார்.

ஓர் இடத்தில் இவர்கள் தங்கியிருக்க மாட்டார்கள். எப்பொழுதும் அங்கும் இங்கும் சென்று கொண்டிருப்பார்கள். பசியைப் பொறுக்க மாட்டார்கள். அகன்ற கண், மார்பு கொண்டிருப்பர். சிறுவயதில் தகப்பனாரையோ, குருவையோ அண்டி நல்விஷயங்களைக் கற்றுக் கொள்வதில் இவர்களுக்கு இடைஞ்சல்கள் அதிகம் இருக்கும்.

ஏதோ ஒரு வ்யாதி இவர்களிடம் குடிகொண்டிருக்கும். எனினும் ஸூர்ய உபாஸனையால் அவற்றை தவிர்த்து விடுவர். இவர்களில் சிலருக்கு மத்ஸ்ய ரேகை ஸரீரத்தில் இருக்கும். இந்த ரேகை உள்ளவர்கள் தன் பார்வையாலேயே மற்றவரை த்ருப்திப்படுத்திவிடுவர். சரியான சூழ்நிலையில் வளராத வ்ருச்சிக ராசிக்காரர்கள் மறைவில் கெட்ட காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுவிட வாய்ப்பு உள்ளது. சனியின் ஆளுகைக்கு உட்பட்ட நக்ஷத்ரம் ஆதலால் ஆஞ்சநேயரை உபாஸிக்க, அனுகூலம் அடைவர். மொத்தத்தில் அனுஷம் சிறந்த நக்ஷத்ரம். அனுஷத்தில் த்ரேதாக்ன்யாதானம் செய்து கொண்டால் மேன்மேலும் ஸம்ருத்திகள் ஏற்படும் என ஶ்ரௌத்த ஸூத்ரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

அனுஷத்தில் பிறந்தவர்கள் தன் வாழ்க்கைமுறைகளை நல்வழிப்படுத்திக் கொண்டால் எவ்வளவு உயர்வாகத் திகழலாம் என்பதற்கு நிதர்சனம், ஸ்ரீ மஹா பெரியவாள் அவர்கள். நாம் ஒவ்வொருவரும் அவர்களுடைய செய்கைகளையும், உபதேசங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். அதுவே நம் ஜன்ம ஸாபல்யத்திற்கு வழி வகுக்கும். நாம் புதியதாக எதுவும் கண்டுபிடிக்க வேண்டாம். ஸ்ரீ மஹா பெரியவாள், இக்கட்டான ஸமயங்களில் என்ன விதமான வழியில் செயல்பட்டார்கள் என்பதை மஹனீயர்கள் மூலம் அறிந்து அதன்படி செயல்பட்டால் போதும். நாம் கடைத்தேறிவிடலாம்.

*"குரோனுக்ரஹேணைவ புமான் பூர்ண: ப்ரஜாயதே".* ■

---

*இந்தனம் இல்லாத அக்னி எங்ஙனம் தானாகவே, அணைந்து விடுமோ அங்ஙனம் பற்றிக்கொள்ள விஷயங்கள் இல்லாத பொழுது மனதானது தானாகவே அடங்கிவிடும்.*

**- பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : சென்ற மாத மதுரமுரளியில் தங்களின் 'குருநாதர் வாழி' என்ற கிளிக்கண்ணி பாடல் ஒன்று வந்திருந்ததைப் பார்த்தேன். அந்தப் பாடல் எந்த குருவைக் குறித்து எழுதப்பட்ட பாடல்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : அந்தப் பாடல் குருபூர்ணிமா அன்று எழுதப்பட்டது. சைதன்ய மஹாப்ரபு, ஸ்ரீவல்லபர், நிம்பார்கர், ஹரிவம்ஸர், ஞானேஶ்வரர் போன்ற அநேக மஹாத்மாக்கள் பாகவதத்தையே ப்ராணனாகவும், ஸ்ரீக்ருஷ்ண கீர்த்தனத்தையே லக்ஷ்யமாகவும் கொண்டு பகவானுடைய ஸேவையில் ஈடுபட்டு ஒரு ஸம்ப்ரதாயத்தையும் ஸ்தாபித்துள்ளனர். இவர்களைப்போல் உள்ள அனைவருக்குமே இது பொருந்தும்.

*கேள்வி : த்யானம் பழகி வரும் எனக்கு, தாங்கள் சொல்லும் அறிவுரை என்ன?*

பதில் : த்யானம் ஸித்திக்க வேண்டுமானால் விடாத அப்பியாசம் தேவை. அதற்கு அடிப்படை வைராக்யம். வைராக்யத்துடன் அப்பியாசம் செய்ய வேண்டும். நம்முடைய வாஸனை பலத்தினால் நாம் நம்முடைய ஸாதனைகளிலிருந்தும், தெய்வீக வாழ்க்கையிலிருந்தும் வழுவக்கூடும். அப்பொழுதெல்லாம் சலித்துக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் தைர்யத்துடனும் ஆர்வத்துடனும் ஸாதனையில் ஈடுபடவேண்டும்.

*கேள்வி : நான், ஒரு முறை கோயிலுக்குச் சென்றபொழுது, மூல ஸ்தானத்தில் எங்கும் ஒளிமயமாகவும், ஸ்வாமியின் அர்ச்சாவதார திருமேனி வித்தியாசமாக, ஒரு விதமான சைதன்யத்துடனும் தெரிந்தது. ஆனால் அதற்கு முன்பும் அதற்கு பின்பும் பலமுறை சென்றும் இதுபோன்ற அனுபவம் எதுவும் எனக்கு ஏற்பட்டதில்லை. ஆனால், அந்த காட்சி என் மனதில் நன்றாக பதிந்துவிட்டது. அதுவும் மறக்கவில்லை. இது ப்ரமையா? என்னுடைய கற்பனையா? ஒன்றும் புரியவில்லையே!*

பதில் : இதையேத்தான் தெய்வ அனுக்ரஹம் என்று கூறுவார்கள். உத்தமமான ஞானிகளின் ஸன்னிதானத்தில் சில காலம் இருந்துவிட்டு அதே உணர்வுடன் கோவில்களுக்குச் செல்லும்பொழுது இப்படி ஏற்படுவதுண்டு. மஹாத்மாக்கள் நம்மைத் தொட்டு அதன் மூலமாக நமக்கு ஆன்மீக விழிப்பு ஏற்படச் செய்வதாலும் இப்படி ஏற்படுவதுண்டு. ■

# வேத கதைகள்-16

- தர்மக்ஞர், வாங்முக ஶார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஶாஸ்திரிகள்

## சொல், மனது இவைகளின் ஸம்வாதம்

ஒரு ஸமயம் வாக், மனம் இவைகளுக்கிடையே ஒரு போராட்டம் ஏற்பட்டது. நான்தான் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை ஸுமக்கிறேன் என்று மனம், வாக் இரண்டும் தகராறு செய்தன. அவைகள் தங்கள் தகராறை தீர்த்துக்கொள்வதற்காக ப்ரும்மாவின் அருகில் சென்றன. ப்ரும்மாவிடம் சென்று தங்கள் எண்ணங்களை தனித்தனியாக கூறின. அதைக்கேட்டு ப்ரும்மா ''ஓ! வாக்கே! நீ மனதிற்கு தூதுயாகத்தான் இருக்கிறாய்'' என்றார். ஏனென்றால் எதையும் மனதால் ஆலோசித்த பிறகே வாக்கு பேசுகிறது. ஒவ்வொரு இந்திரியங்களும் மனது சம்மந்தப்படாவிடில் அந்தந்த இந்திரியங்கள் சரிவர வேலை செய்வதில்லை. உதாரணமாக நாம் ஆர்வத்துடன் படுத்துக்கொண்டிருக்கும்பொழுது நம் கண் விழித்துக்கொண்டிருந்த போதிலும் எதிரில் உள்ளவர்கள் எதுவும் நமக்குத் தெரிவதில்லை. இதற்கு உதாரணமாக பாகவதத்தில் ஒரு கதை கூறப்பட்டுள்ளது.

ஒரு அரசகுமாரன் ஒரு லக்ஷ்யத்தை அடைவதற்காக, வில்லில் பாணத்தைப் பூட்டி மனது, கண் இவைகளை ஒருமுகப்படுத்தி தான் அடிக்கவேண்டிய குறியையே நினைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு அரசன் 18 விதமான வாத்யங்கள் முழங்க, சதுரங்க சைன்யத்துடன் அந்த வழியே சென்றான். ஆனாலும், குறியில் மனதை செலுத்திய அரசகுமாரனுக்கு அரசன் சென்றதை உணரவில்லை. கண், காது, மூக்கு எல்லா புலன்களும் நன்கு திறந்திருந்தபோதிலும் அவைகளில் மனது சம்மந்தப்படாததால் அரசன் சென்றதை அவனால் அறிய முடியவில்லை. இதிலிருந்து மனது சம்பந்தப்பட்டால்தான் வேலை செய்யும் என்று நன்கு புலப்படுகிறது.

*''அன்யத்ர மனா அபூவன் நாவுரஶம், அன்யதமனா அபூவம் நஶௌஷமிதி, மனஸாஹ்யேவ பஶ்யதி மனஸாஶ்ருணோதி*
*காம:, ஸங்கல்ப:, விசிகித்ஸா, ஶ்ரத்தா, அஶ்ரத்தா, த்ருதி:,*
*அத்ருதி: ஹ்ரீ:, தீ: வீ: இத்யேதத் ஸர்வம் மன ஏவ''*

எந்த விஷயமும் மனதால்தான் அறியமுடிகிறது என்று ப்ரஹதாரண்ய உபநிஷத் கூறுகிறது. ஆதலால் ப்ரும்மாவானவர் வாக்கைப்பார்த்து நீ மனதிற்கு அடிமைதான், மனஸுதான் தேவர்களுக்கு ஹவிஸ்ஸை அளிக்கிறது என்று கூறினார். இதைக்கேட்டு வாக்கிற்கு

கோபம் ஏற்பட்டது. இன்று முதல் யாவரும் உமக்கு வாக்கால் ஹோமம் செய்யக்கூடாது என்று கோபத்தோடு கூறினார். அதனால் தான் ப்ரஜாபதி தேவதைக்கு மந்திரம் கூறாமல் மௌனமாகவே ஹோமம் செய்யப்படுகிறது.

*யத்தூஷ்ணீம் தத்ப்ராஜாபத்யம் தி:* என்று வேதமே கூறுகிறது. ஆதலால்தான் யாகத்தில் ஆகாரம் இன்றி ஒரு கர்மா. அதில் இரண்டு ஆகாரம் உண்டு. அதில் முதல் ஆகாரத்திற்கு ப்ரஜாபதி தேவதை. அந்த ஹோமம் மட்டும் இன்னும் மௌனமாகவே செய்யப்படுகிறது. இந்தக் கதையானது கிருஷ்ணயஜுர்வேதம் 2வது காண்டம் 6வது ப்ரஶ்னத்தில் உள்ளது.

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

''ப்ரேமிக பவனம்''

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம்-6

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

## பக்தி நிரோத வடிவானது

*ஸா ந காமயமானா நிரோதரூபத்வாத் ॥* 7

ஸா - அந்த பக்தியானது, நிரோத ரூபத்வாத் - ஆசைகளை அடியோடு ஒடுக்கிய, த்யாக வடிவாயிருப்பதால் *காமயமானா ந* - ஆசை வடிவானது இல்லை. அன்பினால் பகவானிடம் கொண்ட ஈடுபாடே பக்தி எனக்கூறிய நாரதர், அன்பானது ஆசையிலிருந்து வேறுபட்டது என விளக்குகிறார் இந்த ஸூத்ரத்தில். உடலை ஒட்டியும், உடல் ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களை ஒட்டியும் ஏற்படும் விருப்பங்களுக்காக ஒருவன் இறைவனிடம் ஈடுபாடு கொள்வானேயானால் அதை பக்தி என்று கூறலாகாது.

தன் நலனுக்காக, தன் மனைவி மக்களின் நலனுக்காக, பணத்திற்காக, புகழுக்காக, வீட்டிற்காக, வேண்டாதவனை ஒழிப்பதற்காக என்று இப்படி எல்லாம் இறைவனை நாடுபவர்கள் உண்டு. அவர்களது இறையுணர்வு பக்தியாகாது. அது ஆசையின் அடிப்படையில் ஏற்படுவது. ஆனால், ப்ரேமை வடிவாகக் கூறப்படும் பக்தியோ, ஆசை ஒழிந்த நிலையில் இறைவனிடம் ஏற்படும் பற்று என்பதால் ஆசையிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. ஆசையில் தன்னலம் நிறைந்திருக்கும். ஆசையானது தன் ஸுகம், சுயலாபம் இவற்றையே குறிக்கோளாக கொண்டிருக்கும். எல்லாவற்றையும் தன்னுடையதாக ஆக்கிக் கொள்ள நினைக்கும். உடலையும், புலன்களையும் பற்றி இருக்கும்.

ஆனால் ப்ரேமையோ தன்னலமற்று இருக்கும். மற்றவர்கள் நலத்திலும், ஸுகத்திலும், லாபத்திலும் மகிழ்ச்சி கொள்ளும் த்யாக வடிவாய் இருக்கும். தயை, இரக்கம் நிரம்பப் பெற்று ஸேவை மனப்பான்மை கொண்டதாய் இருக்கும். ஆத்மாவைப் பற்றி இருக்கும். எனவே, ப்ரேமையில் புலன்கள் அடங்கி, அமைதி நிரம்பியிருக்கும். எனவேதான் ''பக்தி ப்ரேமஸ்வரூபமானது'' என்கிறார். இத்தகைய ப்ரேமையில் ஸரீர ஸம்பந்தமான, இந்த்ரியங்கள் ஸம்பந்தமான இச்சைக்கோ, செல்வம், புகழ், ஐஶ்வர்யம் முதலிய இச்சைக்கோ இடமில்லை.

*"ந மய்யாவேசித தியாம் காம: காமாய கல்பதே ।*
*பர்ஜிதா க்வதிதா தானா: ப்ராயோ பீஜாய நேஷ்யதே" ॥*

- ஸ்ரீமத் பாகவதம்

"பிளக்கப்பட்ட, வறுக்கப்பட்ட, வேக வைக்கப்பட்ட தான்யங்களில் எவ்வாறு முளை வெளிவராதோ அவ்வாறு என்னிடம் செலுத்திய மனதில் எந்த ஆசையும் எழாது" என்கிறார் பகவான்.

*"யஸ்த ஆஶிஷ ஆஶாஸ்தே ந ஸ ப்ருத்ய: ஸ வை வணிக்"*

- ஸ்ரீமத் பாகவதம்

"அல்பமான விருப்பங்களுக்காக உம்மை நாடுபவன் பக்தனே இல்லை. அவன் வியாபாரி" என்று கூறிய ப்ரஹ்லாதன், "ஏதாவது வரம் கொடுப்பதானால், உள்ளத்தில் உம்மைத் தவிர எந்த ஆசையும் எழும்பக்கூடாது" என வரமளிக்க வேண்டுகிறார் நரஸிம்ம மூர்த்தியிடம்.

"பக்த ஶ்ரேஷ்டனான அம்பரீஷனின் ஆசையும் பகவத் கைங்கர்யத்திலேயே இருந்தது. வேறு விஷயங்களில் இல்லை" ***'காமம் ச தாஸ்யே ந து காமகாம்யயா"*** என்கிறார் ஶுகப்ருமம்.

மோக்ஷ ஆசை கூட 'ப்ரேம பக்தனின் உள்ளத்தில் எழும்புவதில்லை. பகவானே பலவந்தமாகக் கொடுத்தாலும் பக்தன் ஏற்பதில்லை.

*"ஸாலோக்ய ஸார்ஷ்டி ஸாமீப்ய ஸாரூப்யைகத்வமப்யுத ।*
*தீயமானம் ந க்ருஹ்ணந்தி வினா மத்ஸேவனம் ஜனா: ॥"*

-ஸ்ரீமத் பாகவதம்

"பகவானின் லோகத்தை அடைவதான ஸாலோக்யம், பகவானுக்கு நிகரான ஐஶ்வர்யமுடைய ஸார்ஷ்டி, பகவானின் ஸமீபத்திலேயே இருப்பதான ஸாமீப்யம், பகவானைப் போன்றே ரூபத்துடன் விளங்கும் ஸாரூப்யம், பகவானிடத்திலேயே லயிப்பதான ஏகத்வம் எனும் ஸாயுஜ்யம் என்னும் ஐந்து விதமான முக்தியையும் நானே வலுவில் அளித்தாலும் எனது பக்தர்கள் ஏற்பதில்லை. எனது ஸேவையையே அவர்கள் விரும்புகின்றார்கள்" என்கிறார் கபில பகவான்.

ராம குணங்களிலேயே ஈடுபட்ட ஹனுமான், 'மோக்ஷம் வேண்டாம்' எனக்கூறி இன்றளவும் ராம குணங்களிலேயே இச்சை

கொண்டுள்ளார். எனவே, மோக்ஷத்தையும் இச்சிக்க மாட்டார்கள் என்றால் அல்பவிஷயங்களில் எங்கிருந்து இச்சை ஏற்படும்?

பக்தி நிரோத வடிவாயிருப்பதால் முக்தி உட்பட எந்த இசைசையும் மனதில் எழும்புவதில்லை என்று கூறிய நாரதர் நிரோதம் என்பதற்கு அடுத்த இரண்டு ஸூத்ரங்களால் விளக்கம் கொடுக்கிறார்.

*நிரோதஸ்து லோகவேத வ்யாபார ந்யாஸ:* // 8 //

நிரோதஸ்து - நிரோதம் என்பதோ, லோகவேதவ்யாபார ந்யாஸ: - லௌகிக வைதிக செயல்பாடுகளை விடுதலாம். ஒரு செயலும் இல்லாமல் ஒரு க்ஷணம் கூட மனிதனால் இருக்க முடியாது. ஏதாவது செய்து கொண்டிருப்பதே அவன் ஸ்வபாவம்.

*"ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்ய கர்ம க்ருத்"* -பகவத் கீதை

மனதின் ப்ரவ்ருத்திக்கு தக்கபடி கரணங்கள் ப்ரவ்ருத்திக்கின்றன. மனதில் உள்ள பல்வேறு லக்ஷ்யத்திற்கு தக்கபடி லௌகிக முயற்சிகளில் ஈடுபடுகிறான். எவ்வளவுக்கெவ்வளவு ஆசை அதிகமாகி லக்ஷ்யங்கள் பலவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு தூக்கம் ஓய்வு இல்லாமல் இரவு பகலாய் பாடுபடுகிறான். லௌகிக ப்ரவ்ருத்தியால் மட்டும் லக்ஷ்யங்கள் அடைய முடியாத நிலையில் வைதிக ப்ரவ்ருத்தியில் காம்ய கர்மங்களில் ஈடுபட்டு, 'இந்த பலனுக்காக இதை செய்கிறேன். அந்த பலனுக்காக அதை செய்வேன்' என அதிலேயே மனதை செலுத்துகிறான்.

*"போகைஶ்வர்ய ப்ரஸக்தானாம் தயாபஹ்ருத சேதஸாம்"* என்று பகவத் கீதையில் கண்ணன் சொன்னபடி மனது அதிலேயே ஈடுபட்டு நிற்கிறது. ஆத்மார்த்தமான ஈஶ்வர உபாஸனையில் செலவிட நேரம் இருப்பதில்லை. பாடுபட்டு தேடும் ஸுகமும், அதை அனுபவிக்கும் உடலும் அநித்யமானவை என்ற எண்ணமே எழும்புவது கிடையாது. லௌகிக, வைதிக ப்ரவ்ருத்தி இரண்டுமே லோக ஸுகங்களுக்கான ப்ரவ்ருத்தியாகவே இருக்கின்றன. ப்ரியதமனான பகவானின் ஸேவையிலும், ரூப குண சிந்தனையிலும் ஈடுபட்டு அதனால் வேறு எந்த ஆசையும் இல்லாத பக்தனுக்கோ இந்த லௌகிக வைதிக ப்ரவ்ருத்திகளில் மனது நாட்டம் கொள்வதில்லை.

அது தவிர, ஒரு ஜீவன் மனிதப்பிறவி எடுக்கும்பொழுதே தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், ஏனைய ஜீவராசிகள் என்று பலருக்கு கடனாளியாகவே பிறக்கிறான். அந்த கடனை போக்கிக் கொள்வதற்காக இவனுக்கு பல தர்மங்கள் வேதம் முதலிய ஶாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டுள்ளன. அவை விஹித கர்மாக்கள் என்றும், நித்ய கர்மாக்கள் என்றும் சொல்லப்படுகின்றன. ஸந்த்யாவந்தனம், ப்ரஹ்மயக்ஞம், ஔபாஸனம், வைஶ்வதேவம் முதலிய ஸ்மார்த்த தர்மங்களை அனுஷ்டிப்பதாலும், வேத இதிஹாஸ புராணங்களை அத்யயனம் செய்வதாலும், யாகங்கள் செய்வதாலும், பித்ரு கர்மாக்களை அனுஷ்டிப்பதாலும், ஸந்ததியை ஏற்படுத்துவதாலும் பிறவியிலேயே வந்த கடன் நீக்கப்படுகிறது. பூர்ணமாய் பகவானை சரணமடைந்த பக்தனுக்கு பகவானது ஆக்ஞையாக நினைத்து ஶாஸ்த்ரோக்தமான நித்யகர்மாக்களை செய்கிறான். செய்யும் கர்மாக்களையும், அதன் பலனையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்கிறான். லௌகிக கார்யங்களையும் பகவத் கைங்கர்யமாய், பகவத் த்ருப்திக்காக செய்கிறான். அவனது கர்மாக்கள் நிஷ்காம்யகர்மாவாக ஆகின்றன. ஒரு நிலையில் அந்த லௌகிக வைதிக கர்மாக்களும் அவனை விட்டுச் சென்று விடுகின்றன.

அவன் புத்திபூர்வமாய் எதையும் விடுவதில்லை. அவைகளாகவே அவனிடமிருந்து விடைபெற்றுச் செல்கின்றன. பகவத்மயமாய் மனது ஆகிவிட்டபடியால் அவனால் எதுவும் செய்ய முடிவதில்லை. மனது எதிலும் ஈடுபட மறுக்கிறது. சாப்பாடு முதலிய ஜீவனத்துக்கு அத்யாவஶ்ய தேவைகளைக்கூட செய்துகொள்ள முடிவதில்லை. எதையும் பலாத்காரப்படுத்தி செய்விக்க வேண்டியுள்ளது. லோகபாஹ்யன் ஆகிவிடுகிறான். அந்த நிலையில், தான் 'ஸநத்யாவந்தன பத்ரமஸ்து'' என்று சொல்கிறான். இந்த நிலையைக்குறித்தே *''த்ரைகுண்யவிஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன''* (பகவத் கீதை) என்று அர்ஜுனனிடமும்

*''தாவத் கர்மாணி குர்வீத ந நிர்வித்யேத யாவதா ।*
*மத்கதாச்ரவணாதௌ வா ஶ்ரத்தா யாவன் ந ஜாயதே ॥*
(ஸ்ரீமத் பாகவதம்)

என்று உத்தவனிடமும் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் கூறுகிறார்.

*"பக்தஸ்ய நிரபேக்ஷஸ்ய கர்தவ்யம் நேஹ கிஞ்சன ।*
*தஸ்மாத் பக்தோ லோகவேதவ்யபொரேப்யோ விமுச்யதே ॥"*

எந்த அபேக்ஷையும் இல்லாத பக்தனுக்கு செய்யவேண்டியது என்பது எதுவும் கிடையாது. எனவே பக்தன் லோகவேத வ்யாபாரங்களிலிருந்து விடுபட்டவன் ஆகிறான்" என்று எனது குருநாதர் ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸ்ரீ க்ருஷ்ணபக்திரஸோதயத்தில் குறிப்பிடுகிறார். அத்தகைய நிலையில் பக்தனின் ப்ரேமைக்கு வசப்பட்ட பகவான் பக்தன் செய்யவேண்டிய செயல்களை தானே செய்து அவனது லோகாதீத நிலையை தான் அங்கீகரிப்பதை உலகுக்கு காட்டுகிறான். ஸேனாநாவிதருக்காகவும், ரைதாஸூக்காகவும், கபீர்தாஸருக்காகவும், நரஸிம்மமேதாவுக்குமாக தானே வந்து அவர்கள் செய்யவேண்டிய லௌகிக, வைதிக கார்யங்களை, பகவான் தானே செய்ததே ப்ரமாணம். இத்தகைய பக்தனின் நிலையே நிரோதம் என்று சொல்லப்படுகிறது.


நிரோதம் என்பதற்கு மற்றொரு பொருளும் அடுத்த ஸூத்ரத்தில் காட்டப்படுகிறது.

*தஸ்மின் அனன்யதா தத்விரோதிஷூஉதாஸீனதா ச ॥ 9*

தஸ்மின் - பகவானிடத்தில், அனன்யதா - அனன்யதையும், தத்விரோதிஷூ-பகவத் ப்ரதிகூலமான விஷயங்களில், உதாஸீனதா ச - உதாஸீனமாய் இருக்கும் தன்மையும் நிரோதமாகும். வாழ்க்கையில் எந்த நிலையில் இருந்தாலும் பகவானையே த்ருடமாய் பற்றியிருப்பதே அனன்யதையாகும். மீளாத்துயரம் ஏற்பட்ட நிலையிலும் பகவானையே கதியாய் பற்றி இருப்பான் பக்தன். ஸூகத்தாலோ, துக்கத்தாலோ அவனது பகவத்ப்ரேமைக்கு எந்த குறைவும் நேராது. *"யதா ததா வா விததாது லம்பம்"* என்கிறார். ஸ்ரீ க்ருஷ்ண சைதன்ய மஹாப்ரபு.

எந்த நிலையிலும் அவனது ஒவ்வொரு செயலும் ப்ரியதமனான பகவானுக்கு அனுகூலமானதாகவே இருக்கும். அதே போல் பகவானுக்கு ப்ரதிகூலமான கார்யங்களிலும், பகவத் விஷயத்துக்கு ப்ரதிகூலமான விஷயங்களிலும், பகவத் விஷயத்துக்கு ப்ரதிகூலமான ப்ரக்ருதிகளிடமும் உதாஸீனமாய் இருப்பான். பகவத் ஸ்மரணையை மறக்கச் செய்யும் எதுவுமே பகவத் விரோதிதான். விருப்பு, வெறுப்பு அற்ற நிலையே உதாஸீனதை என சொல்லப்படுகிறது. இத்தகைய அனன்ய நிஷ்டையும், பகவத் ப்ரதிகூல உதாஸீனதையும் நிரோதம் என சொல்லப்படுகிறது.

(தொடரும்)



# எந்தரோ மஹானுபாவுலு - 4

ஒரு சமயம், அஜேய விஜயீந்த்ர ஸ்வாமிகளிடம் ஒரு தொம்பங்கூத்தாடி வந்து தன் வித்தையில் போட்டிக்கு அவரை அழைத்தான். கூத்தாடி, இரண்டு கனமான கம்புகளை 15 அடி இடைவெளி தூரத்தில் பூமியில் நட்டு ஒரு தாம்புக் கயிற்றால் 10 அடி உயரத்தில் கம்புகளை இணைத்து, கையில் ஒரு நீளமான கம்பை வைத்துக் கொண்டு கயிற்றின்மேல் நிதானமாக நடந்து காண்பித்தான். ஸ்ரீ விஜயேந்த்ர ஸ்வாமிகள், தன் சிஷ்யர்களை அழைத்து கும்பேஶ்வரர் கோவிலின் ராஜ கோபுரத்தின் உச்சியின் நடுவில் உள்ள கலசத்தையும், ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவிலின் ராஜகோபுரத்தின் உச்சியின் நடுவில் உள்ள கலசத்தையும் மெல்லிய வாழை நார்களால் நூலால் இணைத்துக் கட்டச் சொன்னார். காலில் பாதுகைகள் அணிந்து கொண்டு கைகளை கூப்பிக் கொண்டு, பகவானை ஸ்மரித்து அனாயாசமாக வாழை நார் மேலேயே இரண்டு கோவிலுக்கும் நடுவே 2 தடவை நடந்து காட்டினார். கூடியிருந்த மக்கள் ப்ரமித்துப் போயினர். கூத்தாடியோ ஸ்வாமிகளின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் அவனை ஆசீர்வதித்து, தகுந்த ஸன்மானங்கள் அளித்து கௌரவித்தார்.

ஸ்ரீ நரசிம்ஹவீரராமன் என்ற பாண்டிய நாட்டு பாளையகாரன் தென்னாட்டில் சிற்ப ஶாஸ்திரத்தில் தலை சிறந்து விளங்கி பெரும் புகழ் படைத்திருந்தான். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளின் கீர்த்தியில் பொறாமை கொண்ட எதிரிகள் அவனிடம் சென்று ஸ்வாமிகளை போட்டிக்கு அழைக்குமாறு ப்ரேரணை செய்தார்கள். முதலில் அவன், ஸன்யாஸியிடம் அபசாரப்படக்கூடாது என மறுத்தான். ஆனால் எதிரிகளோ மேலும் மேலும் அவனை வற்புறுத்தி ஒப்புக் கொள்ள வைத்தார்கள். அவனும் கும்பகோணம் வந்து ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் முன் நமஸ்கரித்து நின்றான். உடனே ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் அவனைப் பார்த்து "நம் உபாஸனை மூர்த்திகளின் பெயர்களை கொண்டவரே வாரும். சிற்ப கலையில் என்னுடன் போட்டியிட வந்திருக்கிறீரா? நீர் கொணர்ந்திருக்கும் கைவினைப் பொருள்களை என் முன்னே வையும்" என்றார்.

தான் பேசுவதற்கு முன்பே, ஸ்வாமிகளே தான் பேச வந்த விஷயங்களை ஒன்று விடாமல் பேசி முடித்ததைக் கண்டு ஆச்சரியமும்

அதிர்ச்சியும் அடைந்த பாளையக்காரன், தன் கை வண்ணத்தில் செய்த ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ ஷண்முகன் ஆகிய விக்ரஹங்களை எடுத்து அவர் முன் வைத்தான். அவற்றைக் கூர்ந்து கவனித்த ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள், ''நீர் உயர்ந்த ஸ்தபதிதான், என் கைவினையும் பாருங்கள்'' என்று சொல்லி, மெழுகு உருண்டைகளை எடுத்துக் கொண்டு, துளசி குச்சிகளைக் கொண்டு நான்கே மணி நேரத்தில் பத்து நாளில் செய்ய வேண்டிய வேலையை செய்து முடித்தார்.

அவர் செய்து முடித்த ஸ்ரீ யோக நரசிம்ஹர், ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ மங்களாம்பிகா ஸ்ரீ பூவராஹர் ஆகிய அனைவரின் மூர்த்திகளையும் பார்த்த சிற்பி ப்ரேமித்துப் போய் அவற்றின் நுட்பமான அழகான வேலைப்பாட்டில் மயங்கி, ஸ்வாமிகளிடம், ''தாங்கள் ஜயிக்க முடியாத கலைஞர்தான். தங்கள் நினைவாக வைத்துக் கொள்ள எனக்கு ஒரு விக்ரஹத்தை செம்பில் தாங்கள் வார்த்துத் தர வேண்டும்'' என கேட்டுக் கொண்டான். ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, ''எனக்கு செம்பில் வார்ப்பு வேலை தெரியுமா என ஸோதிக்க விரும்புகிறீர்கள். அவ்வளவுதானே! நாளை செய்து தருகிறேன்'' என்றார்.

மறுநாள், அநேக விக்ரஹங்களை வார்த்து தந்தார். அவைகளில் யோக நரசிம்ஹர், சீதை, ராமர், க்ருஷ்ணர், சக்ரபாணி, ஸாரங்கபாணி, பூவராஹர், மங்களாம்பிகா, ஹனுமார் போன்ற விக்ரஹங்கள் இன்றும் கும்பகோணத்திலுள்ள மடத்தில் பூஜையில் வைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக பூவராஹர் விக்ரஹத்தில் ஒரு கோரைப்பல்லின் மேல் ஒரு நிலக்கடலை அளவில், பூதேவி ஒயிலாக அமர்ந்திருப்பது வெகு அதிசயமான காட்சியாக உள்ளது. ஸ்தபதி, ஸ்வாமிகள் பாதத்தில் விழுந்தான். பிறகு ஸ்வாமிகள் ஸ்தபதிக்கு தகுந்த மரியாதை செய்தார். அவன் ஸ்வாமிகளின் பக்தனாகி அவருக்கு நிறைய பூதானம் செய்து தன்யனானான்.

மற்றொரு சமயம், ஸ்ரீ விநாயக ராமச்சந்திர ஜோஷி என்ற புகழ் பெற்ற பொற்கொல்லனை எதிரிகள் தூபம் போட்டு ஸ்வாமிகளிடம் போட்டிக்கு அனுப்பினர். ஸ்வாமிகளும் சவாலை ஏற்றார். மறுநாள் நகர ப்ரமுகர்கள், கைதேர்ந்த பொற்கொல்லர்கள், பாமரர்கள் எல்லோரும் மடத்தில் கூடினர். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் ஸபையோரிடம், ''கைதேர்ந்த பொற்கொல்லர் ஸ்ரீ விநாயக ராமச்சந்திர ஜோஷியிடம் என் குருநாதர் ஸ்ரீ வ்யாஸராஜர் எனக்கு அருளிய கலை வண்மையைக் காட்டி என் குருவிற்கு புகழ் தேடி தர எனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பது பற்றி மிகவும் மகிழ்ச்சி'' எனக் கூறினார்.

இருவரும் தனித்தனியே ஒருவரை ஒருவர் பார்க்காமல் நகை வேலையை செய்யத் துவங்கினர். தங்களுக்குத் தேவையான பொன் மற்றும் நவரத்தினங்களை இருவரும் பெற்றுக் கொண்டனர். பிற்பகல் மட்டும் வேலை என்ற நியதிப்படி 12 தினங்களில் இருவரும் வேலையை முடித்தனர்.

முடிந்த மறுநாள் காலை, ரத்ன பரீக்ஷகர்கள், வியாபாரிகள், பொற்கொல்லர்கள் இவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற நடுவர் குழுவின் முன் இருவரது கைத்திறன்களான இரண்டு பதக்கங்களும் வைக்கப்பட்டன. அவற்றைத் தனித்தனியே ஆராய்ந்த நடுவர் குழுவின் தலைவர், ஸபையோரைப் பார்த்து, ''ஸ்ரீ விநாயக ராமச்சந்திர ஜோஷி 30 ஆண்டு அனுபவம் பெற்ற புகழ் வாய்ந்த சிற்பி. அவர் செய்துள்ள பதக்கமே அவரின் திறமையை பேசுகிறது. ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளோ ஸன்யாஸி. ஒரு தடவை கூட இந்த தொழிலில் ஈடுபட்டவரில்லை. எனினும் அவர் செய்திருக்கும் பதக்கம் ஜோஷியின் பதக்கத்தைவிட பல விதங்களில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இந்தப் பதக்கத்தில் சிறிய சிவப்புக் கற்களால் சீதை, ஸ்ரீராமன், லக்ஷ்மணன், ஹனுமான் ஆகியோரின் உருவங்கள் வெகு நளினமாக பொறிக்கப்பட்டுள்ளன. நீங்களே இதைக் கண்டு அனுபவிக்கலாம். எனவே, ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளே ஜயித்துள்ளார் என்பது நடுவர் அனைவரது ஏகோபித்த முடிவு'' என்று சொல்லவும் ஸபையோரின் ஜய ஸப்தமும் கரகோஷமும் அளவிட முடியாமல் இருந்தது.

ஸ்ரீ ஜோஷி உடனே ஸ்வாமிகளின் பதக்கத்தைக் கையில் எடுத்துப் பார்த்தார். முதலில் லேசாக சிரித்தார். பிறகு ஆச்சரியமடைந்தார். சிறிது நேரத்தில் தாரை தாரையாக கண்ணீர் பெருக்கலானார். எழுந்து கைகூப்பி ஸாஷ்டாங்கமாக ஸ்வாமிகளை நமஸ்கரித்து, ''தாங்கள் தெய்வீக சிற்பி. சூரியன் முன் கைவிளக்கு போல் நான் தங்களிடம் தோற்றத்தில் பெருமை அடைகிறேன். நான் செய்த பதக்கத்தை ஸ்வாமிக்கு ஸமர்ப்பணம் செய்வதை ஏற்று என்னை தன்யனாக்க வேண்டும்'' என குரல் தழுதழுக்க வேண்டினார். ஸ்வாமிகளும் அவர் விருப்பப்படி அன்று முதல், பூஜைக்கு அந்த பதக்கத்தையும் தம் பதக்கத்தையும் ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்து வந்தார். அவருக்கு தீர்த்த ப்ரஸாதம், ஸன்மானங்கள் கொடுத்து அனுப்பினார். இன்றும், ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகளின் மந்த்ராலய மடத்தில் உள்ள இந்த பதக்கங்களை விசேஷ காலங்களில் ஸ்ரீ மூலராமனுக்கு அணிவிக்கப்படுவதை பக்தர்கள் கண்டு களிக்கின்றனர்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# உண்மையே பேசுதல்


ஒரு தேசத்தை ராஜா ஒருவன் ஆட்சி செய்து வந்தான். அந்த நகரத்திற்கு ஒரு ஸந்யாஸி வந்து தங்கி சாதுர்மாஸ்ய வ்ரதம் அனுஷ்டித்து வந்தார். அந்த நான்கு மாதங்களும் ஒரு ஸந்யாஸி வேறு ஊருக்குச் செல்லாமல் ஒரே இடத்தில் இருந்து கொண்டு தன் நியமப்படி இருக்க வேண்டும். அதன்படி அவர் ப்ரதி தினம், பூஜை, ஜபம், த்யானம், பக்தர்களுக்கு ஸத்உபதேசம் முதலியவற்றை செய்து வந்தார். அந்த நகரத்திற்கு எல்லையில் ஒரு திருடன் இருந்து வந்தான். அவன், ஒவ்வொரு நாளும் திருட்டுத் தொழில் செய்து அதில் கிடைப்பதை வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவன் தனக்கு என ஒரு வழிவகுத்துக் கொண்டு இருந்தான். அதாவது திருடப்பட்ட பொருள் எவ்வளவு காலம் தன் வாழ்க்கைக்கு வருகிறதோ, அவ்வளவு காலம் திருடுவது கிடையாது என்பது அது. பிறகு, தேவைப்படும்பொழுதுதான் திருடுவான். இப்படியாக இருந்ததால் அவனுடைய திருட்டானது வெளியில் தெரியாமலும், அரசாங்கத்திடம் மாட்டிக் கொள்ளாமலும் இருந்து வந்தது. ஆனால், அவனுக்கு மனதில் தினம் ஒரு விஷயம் தோன்றும். நாம் இந்த பாபச்செயலை செய்து வருகிறோமே, இதற்கு ஒரு முடிவு வராதா?'' என்று தோன்றும். இருந்தும் வேறு தொழில் செய்யத் தெரியாமல் இப்படியாக வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள், அவன் நகரத்தைப் பார்ப்பதற்கு கடை வீதிக்கு வரும்பொழுது ஒரு வீட்டில் பஜனை ஸங்கீதம் கேட்டது. பஜனையில் நாமாவளியை அனைவரும் பக்தி பரவசமாக பாடிக் கொண்டு இருந்தது திருடனுடைய காதில் ரம்யமாக விழுந்தது. உடனே அவனுக்கு அந்த வீட்டின் உள்ளே சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. உள்ளே சென்று பார்த்தான். அந்த ஸந்யாஸி எதிரில், பக்தர்கள் பாடிக் கொண்டு இருந்தார்கள். திருடனும் அவர்களுடன் உட்கார்ந்து பஜனையைக் கேட்டுக் கொண்டிருந்தான். பஜனை முடிந்ததும் அவன் தன் இருப்பிடத்திற்குச் சென்று விட்டான். மறுநாள் அவனுக்கு பஜனை நடந்த அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று தோன்றியது. அந்த ஸந்யாஸி இருக்கும் இடத்திற்குச் சென்றான். அவரிடம் பேச வேண்டும் என்று தோன்றியதால் அவரிடம் பேசத் தொடங்கினான்.

அந்த ஸந்யாசி திருடனை விசாரித்தார். ''நீ எங்கு இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?'' என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டார். அவன் எதையும் மறைக்காமல் உள்ளது உள்ளபடி விஷயத்தைச் சொன்னான். அவன் அவரிடம், ''தாங்கள் தான் எனக்கு நல்ல வழி காட்ட வேண்டும். நான் குற்றமற்றவனாக வாழ வேண்டும். அதற்கு தாங்கள் எனக்கு உபதேசம் செய்ய வேண்டும். என்னை, தங்களின் பக்தர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். அந்த ஸந்யாசியும் அவனிடம், ''இன்று முதல் உண்மையே பேச வேண்டும், எந்த சூழ்நிலையிலும் பொய் சொல்லக்கூடாது'' என்று கட்டளையிட்டார். ''இந்த கட்டளையை நீ ஏற்றுக் கொண்டு வாழ்ந்தால் உன்னை என் பக்தர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்று மேலும் சொன்னார். அந்த திருடனும், ஸத்ய ப்ரதிக்ஞை செய்து, ''இன்று முதல் உண்மையே பேசுவேன்'' என்று சொன்னான். ஸந்யாஸியும் அவனுக்கு ஆசி அளித்தார். திருடன் தன்னிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டான்.

சில காலம் திருட்டுத் தொழிலில் ஈடுபடாமல் இருந்து வந்தான். பசியால் வாடினான். ஒரு நாள் பசியின் கொடுமை தாங்க முடியாமல் முந்திய வாழ்க்கையைப் போல் திருட்டுத் தொழிலில் இறங்க ஆரம்பித்தான். நேராக ராஜாவின் அரண்மனையை நோக்கிச் சென்றான். தான் எந்த வழியில் சென்றால் காவலர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்க முடியுமோ, அந்த வழியில் சென்றான்.

அரண்மனையை அடையும்பொழுது அந்த தேசத்து ராஜாவானவன் மாறுவேஷம் போட்டுக் கொண்டு வீதியில் வந்தார். அந்த அரசர் திருடனைப் பார்த்தார். அவனிடம் சென்று, நீ யார்? என்று கேட்டார். திருடன் உண்மையைச் சொன்னான். ''நான் திருடன், அரண்மனையில் திருடவந்துள்ளேன்'' என்று சொல்லிவிட்டு, நீ யார்?'' என்று பதில் கேள்வி கேட்டான். ராஜாவானவர் மாறுவேஷத்தில் உள்ளதால், ''நானும் திருடன் தான், திருடத்தான் வந்துள்ளேன்'' என்று சொன்னார். இருவருமாக திருடி, அதில் கிடைப்பதை வைத்துக் கொண்டு ஸமமாக பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பேசிக்கொண்டார்கள். திருடன் மாறு வேஷத்தில் வந்த ராஜாவிடம், ''நான் உள்ளே சென்று, கிடைத்ததை திருடிக் கொண்டு வருகின்றேன். நீ இங்கேயே இரு'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.



கஜானாவைத் திறந்து பார்த்தான். அதில் மூன்று ரத்னங்கள் இருந்தது. மூன்றையும் எடுத்துக் கொள்ளலாம் என்று யோசித்தான். ஆனால் இருவரும் ஸமமாக பங்கு எடுத்துக் கொள்ள வேண்டுமே, மூன்றாக எடுத்துக் கொண்டால் ஸமமாக வராது. இரண்டு ரத்னங்களை மட்டும் எடுத்துக் கொண்டான். வெளியே வந்து மாறுவேஷத்தில் இருக்கும் ராஜாவிடம், தான் திருடிக் கொண்டு வந்ததைக் காண்பித்து, ஒரு ரத்னத்தை ராஜாவிடம் கொடுத்து ஒன்றை எடுத்துக் கொண்டுப் புறப்பட்டான்.

ராஜாவும் திருடனைப் பின் தொடர்ந்து அவன் எங்கு மறைந்து கொள்கின்றான் என்பதை கவனித்து தன் அரண்மனைக்குத் திரும்பினார். கஜானாவைப் போய்ப் பார்த்தார். அதில் ஒரு ரத்தினம் அப்படியே இருந்தது. அதை அப்படியே வைத்துவிட்டு தன் இடம் வந்து உறங்கிவிட்டார். மறுநாள் காலையில் காவலர்கள் ''அரண்மனையில் திருட்டு போய்விட்டது'' என்று தெரிவித்தனர். ராஜா, ஸபையில் என்ன நடந்தது? என்ன பொருள் காணாமல் போய்விட்டது என்று கேட்டு மந்திரியை அனுப்பினார். மந்திரியும், கஜானாவைப் போய்ப் பார்த்தார். திருடன், இரண்டு ரத்தினங்களை எடுத்துச் சென்றதையும் ஒரு ரத்தினம் விடுபட்டிருப்பதையும் அறிந்தார்.

திருடன் கிடைப்பது அரிது. திருட்டுப் பொருளும் கிடைப்பது அரிது. அதனால், இந்த ரத்தினத்தை தாம் எடுத்துக் கொள்வோம். யாரும் இதை அறியமாட்டார்கள் என்று தான் அதை எடுத்துக் கொண்டு ராஜாவிடம் திரும்பினார். மந்திரி, ராஜாவிடம், ''அரசே! மூன்று ரத்தினங்களும் காணாமல் போய்விட்டன. திருடன் திருடிச் சென்றுவிட்டான்'' என்று கூறினார்.

ராஜாவிற்கு திருடன் இருக்கும் இடம் தெரிந்திருந்தமையால் அவனைப் பிடித்துவர உத்தரவிட்டார். அரச காவலாளிகளும் ராஜா சொன்ன எல்லைப் பகுதிக்குச் சென்று திருடனைப் பிடித்து அழைத்து வந்தார்கள். திருடன் ஸபையில் வந்தவுடன், ராஜா திருடனை விசாரித்தார். திருடனும் தான் திருடியதை ஒப்புக் கொண்டு ஒரு ரத்தினத்தை சபையோர் எதிரில் வைத்தான். மீதியைப் பற்றிக் கேட்டபொழுது திருடன் ஸபையோரிடம், ''என்னுடன் மற்றுமொரு திருடனும் வந்தான். நான் இரண்டு ரத்தினங்களை மட்டுமே திருடினேன். அதில் ஒன்றை நான் எடுத்துக் கொண்டேன். மற்றொன்றை அந்த திருடனிடம் கொடுத்து விட்டேன். மீதி இருந்த ஒன்றை அப்படியே கஜானாவில் வைத்துவிட்டுச் சென்றேன்'' என்றான்.

இதைக் கேட்ட மந்திரியானவர், ராஜாவிடம், ''அரசே! இவன் பொய் சொல்கின்றான். மூன்றையும் இவன் எடுத்துக் கொண்டு, ஒன்றை மட்டும் காட்டுகின்றான். இரண்டை மறைத்து விட்டான். அதனால், இவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்'' என்றார்.

ராஜா அதற்கு, ''இவன் சொல்வது அனைத்தும் உண்மை. இவனுடன் திருடின திருடன் நான்தான். என்னிடம் ஒரு ரத்தினம் இருக்கிறது'' என்று சொல்லி தன்னிடமுள்ள இரண்டாவது ரத்தினத்தை எடுத்து வைத்தார். மந்திரிக்கு ஒன்றும் புரியவில்லை.

ராஜா மந்திரியைப் பார்த்து, ''முதல் திருடன் இவன், இரண்டாவது திருடன் நான், மூன்றாவது திருடன் நீ. உன்னிடம் உள்ள ரத்தினத்தை கொடுத்துவிடு'' என்று சொன்னவுடன், மந்திரியும் ஒன்றும் சொல்ல முடியாமல் தன்னிடமுள்ள மூன்றாவது ரத்தினத்தை எடுத்துக் கொடுத்தார்.

ராஜா மந்திரியிடம், ''இத்தனை சௌகர்யம் இருந்தும் நீ திருடியிருக்கிறாய். ஆனால், வறுமையில் திருடின திருடனின் குற்றம் பெரிய குற்றமாகாது. பொய் சொல்லக்கூடிய திருடன் உண்மை சொல்கிறான். உண்மை சொல்ல வேண்டிய நீ பொய் சொல்கிறாய். அதனால், உனக்குக் கடுமையான தண்டனை விதிக்கிறேன். திருடனாயிருந்தாலும் உண்மை பேசினதால் அவனுக்கு மந்திரி பதவி தருகிறேன்'' என்று தீர்ப்பு சொன்னார்.

திருடன் மந்திரியானவுடன் நேராக தான் தரிசித்த ஸந்யாஸியை தேடிச் சென்று வணங்கி, ''தங்களின் உபதேசத்தினால்தான் இந்த மந்திரி பதவி எனக்குக் கிடைத்துள்ளது'' என்றும் இங்ஙனமே என்றும் உண்மை பேசுபவனாகவே இருக்க அருள் புரிய வேண்டும்'' என்றும் வேண்டினான்.

**- T. கண்ணன் தீக்ஷிதர்.**

---

நமது மிஷன் சார்பில், ''சாந்தீபனி குருகுலம்'' என்ற டிரஸ்டின் கீழ் ஸாமவேத பாடசாலையும், ''யஜுர்வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.


# பாலகர்களுக்கு ஒரு கதை - 11

– ஸ்ரீஸ்வாமிகள்

ஒரு சமயம், ஒரு பக்தருக்கு வாழ்க்கையில் அதிகமான சிரமங்கள் ஏற்பட்டன. அவர், தன்னுடைய நண்பர் ஒருவரிடம் தன்னுடைய சிரமங்களை எல்லாம் எடுத்துக் கூறி தனக்கு ஏதாவது ஆலோசனை கூறுமாறு கேட்டுக் கொண்டார். அந்த நண்பரும் தனக்குத் தெரிந்த ஒரு ஜோதிடரைப் பற்றிக் கூறி, அவர் மிகவும் நன்றாக ஜாதகங்கள் பார்க்கக் கூடியவர், உங்களுடைய ஜாதகத்தை அவரிடம் கொண்டு காண்பித்தால் கிரஹங்களை ஆராய்ந்து அதற்கு தகுந்த பரிஹாரங்களை கூறுவார். அதன்படி செய்தால் நன்மை பிறக்கும் என்று கூறினார்.

பக்தரும் தன்னுடைய நண்பருடைய ஆலோசனையின் பேரில் அந்த ஜோதிடரைப் பார்க்கச் சென்றார். ஜோதிடரும் இவருடைய ஜாதக பலன்களை ஆராய்ந்து பார்த்துவிட்டு நாளை வரும்படியும், நாளை வந்தால் அதற்கான பலாபலன்களைக் கூறுவதாகவும் தெரிவித்தார். அந்த பக்தரும், ஜோதிடரைப் பார்த்து விட்டு திரும்புகையில், நல்ல மழை பிடித்துக் கொண்டு விட்டதால் ஒரு பாழடைந்த பெருமாள் கோவிலில் ஒரு அரை மணிநேரம் தங்கும்படி நேர்ந்துவிட்டது. அப்பொழுது அந்த பெருமாள் கோவில் இருக்கும் ஸ்திதியைப் பார்த்து அவர் மனம் மிகவும் தாபப்பட்டது. அந்த கோவில் மிகவும் பாழடைந்த நிலைமையில் மிகவும் மோசமாக இருப்பதைப் பார்த்த அவர், தனக்கு மட்டும், பகவானுடைய அனுக்ரஹத்தால் தனம் கிடைக்குமானால், அந்த கோவிலை எப்படியெல்லாம் பழுது பார்த்து புனருத்தாரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும் என்று பலவிதமாக கற்பனை செய்து மானஸீகமாக ஸம்ப்ரோக்ஷணமும் செய்து முடித்துவிட்டார். மழையும் விட்டுவிட்டதால் வீடு திரும்பி மறுநாள் ஜோதிடரைப் பார்க்கச் சென்றார்.

ஜோதிடருக்கு அவரைப் பார்த்தவுடன் ஆச்சரியம் தாங்கவில்லை. ஜோதிடர், வந்த பக்தரைப் பார்த்து கூறலானார். இதுவரை ஜோதிடத்தில், என்னுடைய கணக்கு சற்றும் பிசகியது இல்லை. தங்களுடைய ஜாதகத்தை நேற்று நான் பார்த்ததில் தங்களுக்கு ஜாதகப்படி நேற்று இரவு மரணம் ஸம்பவித்திருக்க வேண்டும். இதை எப்படி தங்களிடம் தெரிவிப்பது என்று தயங்கியே 'நாளை வாருங்கள்' என்றேன்.



மேலும், இந்தக் கண்டத்திலிருந்து நீங்கள் தப்ப வேண்டுமானால் ஒரு பெருமாள் கோவிலைப் புதுப்பித்து ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும் என்றுள்ளது. அதற்கான தனமும் தங்களிடம் இல்லை. கால அவகாசமும் இல்லை. ஆகையால், பரிஹாரத்தைப் பற்றி நான் தங்களிடம் எதுவும் தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

அந்த பக்தரும், தான் திரும்பிச் செல்கையில், நடந்த எல்லாவற்றையும் கூறினார். அந்த ஜோதிடரும், தாங்கள் தங்கிய பெருமாள் கோவிலின் பாழடைந்த நிலைமையைக் கண்டு தாங்கள் தாபப்பட்டு மானஸீகமாக அதற்கு ஸம்ப்ரோக்ஷணம் நடத்திவிட்டதால் அதற்கான புண்யபலன் தங்களுக்குக் கிடைத்துவிட்டது. ஆகவே, நீங்களும் உங்களுக்கு ஏற்பட இருந்த கண்டத்திலிருந்து தப்பித்து விட்டீர்கள்.

ஆகவே, நாமும் எப்பொழுதும் மனதில் நல்ல எண்ணங்களையே நினைக்க வேண்டும். ஒருவர் கஷ்டப்படும்பொழுதும், நோயினால் வருந்தும்பொழுதும் நாம் நம்முடைய ஸரீரத்தினாலேயோ, பணத்தினாலேயோ எதுவும் செய்ய முடியாது போனாலும், அவர்களுக்காக இரக்கப்பட்டால் அந்த இரக்கமே கூட அவர்களுக்கு நல்லதைச் செய்யும்.

"Even Mercy has got some force." ■

---

ஒரு மஹாத்மாவின் ஸன்னிதானத்தில் இருப்பவன் க்ஷேத்ராடனங்கள் செல்வதும், தீர்த்தயாத்திரை செல்வதும் எப்படி இருக்கிறது என்றால், நல்ல புயல் காற்று அடிக்கும் பொழுது ஒருவன் விசிறியினால் விசிறிக்கொள்வது போல் ஆகும்.

-பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள்

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 37

*கொடியிட்டடியரைக் கொல்லுனைக் கட்டிக்*
*கொண்டெங்ஙன் வாழ்வன் அருணாசலா* 24

கோவிலில் உத்ஸவாதி காலங்களில் கொடி ஏற்றுவது என்ற ஒரு சடங்கு உண்டு. ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு கொடி உண்டு. யுத்தத்திற்குச் செல்லும் ராஜாக்களும் அவரவர்களது கொடியை தங்கள் ரதத்தின் மேல் பறக்க விட்டுக்கொண்டு செல்வார்கள். எல்லா கோவில்களிலும் கொடி மரம் உண்டு. உத்ஸவங்கள் ஆரம்பமாகுமுன் கொடியேற்றுவது எதற்காக என்றால் எத்தனை தடைகள் வரினும் தளராமல் அந்த உத்ஸவத்தை பூர்த்தி செய்தாக வேண்டும் என்பதே. யுத்தத்திற்குச் செல்லும் அரசர்களும் தன்னுடைய ரதத்தில் கொடி கட்டிக் கொண்டு செல்வது, எத்தனை எதிர்ப்புகள் வரினும் அதில் தேறி வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத்தான்.

நம்முடைய பேச்சு வழக்கில்கூட ஏதோ ஒரு விஷயமாகவே ஒருவர் முனைப்பாக ப்ரயத்தனப்பட்டுக் கொண்டிருப்பாரனால் அவர் ''த்வஜம்'' கட்டிக் கொண்டு அலைகிறார் என்று சொல்வதுண்டு. த்வஜம் என்பது கொடியினைக் குறிக்கும். அதுபோல், யாக வேள்விகளைச் செய்யும் பொழுதும், வேள்வியை ஆரம்பிக்கும் முன், கொடி கட்டுவதுண்டு.

காளிதாஸன், தன்னுடைய நாடகத்தில், ''யாகத்திற்காக கொடி ஏற்றப்பட்டதைப் பார்த்த மாத்திரத்தில் மக்கள் அனைவரும் அக்கணமே சுபிக்ஷம் ஏற்பட்டுவிட்டதைப் போல் குதூஹலம் அடைந்தார்கள்'' என்று கூறுகிறார். மேலும் கொடியேற்றியதால் உத்ஸவம் நடக்கிறது என்றும், வேள்வி நடக்கிறதென்றும், இது இந்த மன்னருக்குட்பட்ட ப்ரதேசம் என்றும், அவருடைய ஆட்சி நடக்கிறதென்றும் தெரிய வருகின்றது.

அதுபோல், திருவண்ணாமலையில் அரசாட்சி செய்து வரும் அருணாசலேஸ்வரர், ஒரு கொடி கட்டிக் கொண்டிருக்கிறாராம். அதன் தாத்பர்யம், தன்னுடைய பக்தர்களின் - தன்னை தேடிவரும் பக்தர்களின் - (கொல்லுனைக் கட்டி) ஜீவபேதத்தை அழித்தே தீருவது என்பதை காண்பிப்பதற்காகவே அந்தக் கொடி.

ஸ்ரீமத் பாகவதத்தில், வ்ருத்ராஸுரன் போன்ற அசுரர்கள் பகவானிடம் பக்தி கொண்டு யுத்தம் செய்ததாக வருகின்து. வ்ருத்ராஸுரன் பகவானுடன் யுத்தம் செய்யும் பொழுது அவன் இறக்க நேரிடுகிறது. பகவான், ஏன் அவனைக் கொன்றார்? ஏன் ரக்ஷிக்கவில்லை? என்று பலருக்கு ஐயம் தோன்றும். நாம் ஸரீரத்தை ரக்ஷிப்பதுதான் நம்மை ரக்ஷிப்பது என்று நமக்குத் தோன்றுவதால்தான் இதுமாதிரியான ஐயம் தோன்றுகின்றது. பழத்தைச் சாப்பிட விரும்பும் ஒருவன் அதன் தோலை எறிந்துவிட்டு ரஸத்தை எடுத்துக் கொள்வது போலவும், ஒரு திருடன் பணப் பெட்டியில் உள்ள பணத்தை எடுத்துக் கொண்டு பணப் பெட்டியை எறிந்துவிடுவது போலவும் பகவான் அவர்களின் ஆத்மாவை ரக்ஷித்து விடுகின்றான்.

அதுபோல், இந்த இடத்தில் ''கொல்வது'' என்பது ஸரீரத்தை அல்ல. அவர்களுடைய அஜ்ஞானத்தை - வாஸனையை - மாயையை - ஜீவ பேதத்தை. இதை ஸ்வரூபமாக பார்த்தோமானால், நாயகியானவள் தன்னுடைய அருணாசலேஶ்வரரைப் பார்த்து, ''நீ என்னுடைய ஜீவபேதத்தை அழித்து விட்டால், த்வைத ப்ரபஞ்சமே அடிபட்டுப் போய்விடும். நீ, நான் என்ற இரண்டு வ்யக்திகள் இல்லாமல் போய்விடுவோம். குடும்ப வாழ்க்கை நன்றாக அமைவதற்கு ஆண், பெண் என்ற இரண்டு வ்யக்திகள் தேவை. ஜீவ பேதத்தை அழித்து, நீ, நான் என்ற த்வைதத்தை அழித்த பின், ***''கொண்டெங்ஙன் வாழ்வன்''***, அதாவது இனி எவ்வாறு உன்னுடன் வாழ்வது, எவ்வாறு உன்னுடன் குடும்பம் நடத்துவது என்று கேட்கிறார்.

(தொடரும்)

| | | |
|---|---|---|
| முன் அட்டை படம் | : | ஐந்தாவது ப்ரஹ்மோத்ஸவத்தில் கருட வாஹனத்தில், ஸ்ரீ ப்ரேமிக வரதன் |
| பின் அட்டை படம் | : | ப்ரஹ்மோத்ஸவத்தில் கோவிந்த பட்டாபிஷேக அன்று நம் ஸ்வாமிகள் |

Photos by : Sri R. Kalyanakrishnan

# செய்திகள்

**ஜூலை 27-ந் தேதி**

ஆடிப்பூரத்தை முன்னிட்டு சென்னை ப்ரேமிகபவனத்தில் ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது.

**ஆகஸ்ட் 4-ந் தேதி முதல் 6-ந் தேதி வரை**

கோபாலபுரம் இந்து மத சங்கம் சார்பில், ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி கோவிலில் நடைபெற்ற ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி மஹோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் ***"பக்த சரித்ரம்"*** பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

**ஆகஸ்ட் 14-ந் தேதி முதல் 24-ந் தேதி வரை**

மதுரபுரி ஆச்ரமத்தில் மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் ஐந்தாம் ஆண்டு ப்ரஹ்மோத்ஸவம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. (உத்ஸவத்தின் விபரம் அடுத்த இதழில் வெளிவரும்)

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**செப்டம்பர் 13-ந் தேதி ராதாஷ்டமி**

சென்னைப் ப்ரேமிகபவனத்தில் விசேஷ திவ்யநாமமம் நடைபெறும்.

**செப்டம்பர் 21-ந் தேதி**

நவராத்ரி உத்ஸவம் ஆரம்பம்

**அக்டோபர் 1-ந் தேதி ச்ரவண தீபம்**

சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் அவதார உத்ஸவம் ஆரம்பம்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

வேணு:4 | செப்டம்பர் 1998 | கானம்:2





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar